# தமிழ் சித்த மருத்துவப் பாரம்பரியம்

## The Tamil Siddha Medicine Tradition

பவானி ஆறுமுகம் / Bavani Arumugam[1]

**Abstract**

When a siddhar achieves Attama siddhis, they are referred to as intelligent and enlightened beings. Tamil literature, astronomy, astrology, medicine, alchemy, science, social philosophy, yoga, spirituality, physics, and many other disciplines have all benefited greatly from the contributions of the Siddhas. The practice of Siddha medicine precedes this contribution. Treatment of the three aspects of the human being—body, mind, and soul—is the focus of Siddha medicine. Tamil immigrants have brought siddha medicine, which is highly popular in South India, to other nations. On the palm leaves, the Siddhas jotted down the cures. Following independence, Siddha medicine was methodically compiled into a curriculum and is now offered as a required course in both public and private universities. Among the numerous fields the Siddhas left behind, Siddha medicine plays a major role in human health.

Date of submission: 2024-06-05
Date of acceptance: 2024-06-28
Date of Publication: 2024-07-30
Corresponding author's Name: Bavani Arumugam Email: mannosh.mr@gmail.com

**Keywords:** Siddha, Siddha Medicine, Tamil Medicine, Tamil Tradition, Herbal

### முன்னுரை

தமிழர் மரபில் சித்தர் நெறி என்பது மிகத் தொன்மையான நெறியாகும். மனிதப் பிறப்பு, அதன் இரகசியம், சித்த மருத்துவம், இரசவாதனம், யோகக்கலை, மந்திர சாத்திரம் வாழ்வின் நோக்கம், உலகம், இயற்கைத் தத்துவம், மரணமில்லாப் பெருவாழ்வு என எண்ணிலடங்காத விஷயங்களைத் தன்னகத்தே கொண்டது இந்நெறி (சாமி சிதம்பரனார், 2001). சித்தர் மரபு என்பது சங்க காலத்திலிருந்தே (கிமு 500 - கிபி 300) இருந்ததாகக் கூறப்படும் ஒரு பாரம்பரியம் மிக்க ஆன்மீக மருத்துவ முறையாகும். இதற்கான ஆதாரம் தொல்காப்பியத்தில் (கி.மு. 500) 'அறிவர்' (சிந்தனையின் உச்சத்தைத் தொட்டவர்) என்ற குறிப்பில் இருந்து கிடைக்கிறது. இதில் அறிவர் எனும் சித்தர்களைக் குறிப்பிடுகிறது. தொல்காப்பியத்தின் கூற்றுப்படி, அறிவர் என்பவர் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளக்கூடியவராகவும் தன் சித்தத்தைத் தன் வசம் கொண்டவராகவும் முழுமையான ஞானத்தை அடைந்தவராகவும் பொருளுரைக்கப்படுகின்றனர் (கந்தசாமி, 2003). இதனால் சித்தர்கள் தங்கள் தபோ வலிமையினால் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நபராகவும் பார்க்கப்படுகின்றனர். சித்தா என்ற சொல் 'சித்தி' என்ற மூல வார்த்தையிலிருந்து பெறப்பட்டது, அதாவது எட்டு வகையான யோகப் பயிற்சியின் மூலம் 'அட்டமா சித்தி' எனப்படும் எட்டு

[1]The author is a Senior Lecturer in the Local and Foreign Language Cluster, Centre for the Promotion of Knowledge and Language Learning, Universiti Malaysia Sabah. bavani@ums.edu.my

வகையான சித்திகளைப் பெற்றவரைச் சித்தர் என்று அழைப்பார்கள் (கணபதி, 2004).

மேலும், திருமூலரின் திருமந்திரம் என்ற தமிழ்ப் படைப்பில், சித்தர்கள் மரணமிளாப் பெருவாழ்வு (மரணத்தை வென்று உடல் அழியாமல் பாதுகாக்கும் தன்மையுடையவர்கள் (திருமந்திரம்: 1490) என்ற குறிப்பும் பெறப்படுகின்றது. இதிலிருந்து, சித்தர் என்பவர் மனித நிலைக்கு அப்பாற்பட்ட நிலையை உடையவர் என்பதுவும். இவர்கள் கால எல்லைகளைக் கடந்து வாழ்பவர் என்று அறியப்படுகின்றனர். மரணத்தை வெல்லுதல் காலத்தை வெல்லுதல் எனப் பொருள்படும்.

**சித்தர் விளக்கம்**

சித்தர் என்னும் சொல்லுக்குச் "சித்தி" எனும் சொல்லை வேர்ச் சொல்லாக வழங்கலாம். எண்வகைச் சித்திகள் எனக் கூறப்படுகின்ற அட்டமா சித்திகளைத் தவத்தால் அடையப் பெற்றவரே சித்தர் என்பதை இச்சொல் கூறுகிறது (கந்தசாமி, 2004). மேலும், சித்தர் எனும் சொல்லின் வேர்ச்சொல் "சித்தா" எனும் சொல்லாக விளங்குமாயின், அதன் அடிப்படையில் சித்தர் என்பவர் தான் தன்னைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் நிறை நிலை மாந்தர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

சித்தர் எனும் வார்த்தையின் அடிச்சொல் "சித்" எனக்கொண்டு அதற்கு விளக்கமளிக்கையில், அதன் பொருள் அறிவு, ஞானம், அதன் முதிர்ச்சி நிலை ஆகியவற்றை அடையப் பெற்றவர் என்று அறியப்படுகின்றனர். மேலும் தமது இந்திய தத்துவக் களஞ்சியம் தொகுதி மூன்றில் "சித்தர் சித்தாந்தம்" எனும் பகுதியில் இவர்,

> "சித்தர் என்ற சொல்லுக்குச் சித்தத்தைத் தம் வசப்படுத்தியவர் எனப் பொருள் கூறுதல் உண்டு. யோக சாதனையால் பெறுதற்கரிய ஆற்றல்களையும் வலிமையினையும் பெற்றவர்கள் சித்தர்கள். சித்து, அறிவு எனப் பொருள் தரும். ஆதலின் முக்காலமும் அறியும் ஞானம் பெற்ற சித்தர்களை அறிவர் எனக் கூறுவர்" (2004)

உண்மையில் சித்தர் என்ற சொல்லிற்கு உள்ளார்ந்த வெவ்வேறான பொருள்கள் இருக்கின்றன. இந்த வட மொழிச் சொல்லுக்கு நிறைவடைந்தவன் என்று பொருள். சித்தர்கள் என்பவர்கள் ஒரு தெய்வ இனத்தைச் சார்ந்தவர்கள்; மகத்தான தூய்மையையும் தெய்வீகத்தையும் கொண்டவர்கள். விண்ணிற்கும் மண்ணிற்கும் இடைப்பட்ட வானவெளியில் இவர்கள் வாழ்ந்து வருகிறார்கள் (2005).

**தமிழ்ச் சித்தர்கள்**

நூலக ஆய்வின் அடிப்படையில் பார்க்கும் போது பெரும்பாலான சித்தர்கள் தென்னிந்தியாவிலிருந்து தோன்றியுள்ளனர் என்பது அறியப்படுகிறது. வட இந்தியாவிலிருந்தும் சித்தர்கள் நவநாத சித்தர்கள் என அழைக்கப்பட்டனர். தென்னிந்தியாவில், பதினெண் சித்தர் என ஒரு மரபு உண்டு. இந்தச் சித்தர்கள் தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், வானவியல், ஜோதிடம், மருத்துவம், இரசவாதம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சமூக சிந்தனை, மந்திர சாத்திரம், யோகாசனம், ஆன்மீகம், இயற்பியல் மற்றும் பல துறைகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர்.

மருத்துவத் துறையில், தமிழ்ச் சித்தர்கள் சித்த மருத்துவத்தைத் தனிச்சிறப்பு வாய்ந்த பாரம்பரியமாக உருவாக்கி, உலகளவில் பிரபலமாவதற்கு மிகப் பெரிய பங்களிப்பை அளித்துள்ளனர் (சிதம்பரதாணு பிள்ளை, 2000). சித்தர்கள் அறிமுகப்படுத்திய சித்த மருத்துவத் துறை உலகில் தனித்துவமிக்க துறையாக விளங்குகிறது. இம்மருத்துவம் தமிழ்நாட்டில் பரவலாக இருப்பதால் இதனைத் தமிழ் மருத்துவம் என்றும் அழைக்கின்றனர். இந்த மருத்துவ முறை இந்தியாவில் இருக்கும் அனைத்து மருத்துவத்தின் தாய் மருத்துவம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இந்தத் தமிழ் மருத்துவ முறை கி.மு 500க்கு முன்பே இருந்ததாகத் தொல்லியல் ஆய்வு முடிவுகள் காட்டுகின்றன (திவ்யா அம்ரிஜூட், 2017).

**ஆய்வுக் கட்டுரையின் நோக்கம்**

1) சித்த மருத்துவத்தின் தனித்தன்மைகளை அடையாளம் கண்டு விளக்கப்படுத்துதல்.

2) சித்த மருத்துவத்தின் பாரம்பரியத்தைப்

பற்றி பகுப்பாய்தல்.

## சித்த மருத்துவம் அறிமுகம்

இந்தியாவின் தென்பகுதியில் சித்த மருத்துவ முறை மிகவும் பிரபலமானது. இந்த மருத்துவ முறையானது பண்டைய மற்றும் பாரம்பரிய முறைகளில் ஒன்றாகும். சித்த மருத்துவம் உடலை மட்டுமல்ல, மனதையும் ஆன்மாவையும் சேர்த்துச் சிகிச்சை செய்யும் ஒரு வைத்திய முறையாகும். மற்ற மருத்துவ முறைகளில் இருந்து இம்முறையானது முற்றிலும் மாறுபட்டது. சித்த மருத்துவர்கள் சித்த மருத்துவ முறைகளில் மட்டும் தேர்ச்சியுற்றவர்களாக அல்லாமல் ஆன்மீகச் சிந்தனைகளிலும் யோகக் கலைகளிலும் தேர்ச்சியுற்றவர்களாக விளங்குவதே இந்தப் பாரம்பரிய மருத்து முறையின் தனிச் சிறப்பாகும்.

சித்தர்கள் பழங்காலத்தில் இந்தச் சித்த வைத்திய முறையை தோற்றுவைத்தவர்கள் ஆதலின் இம்மருத்துவம் சித்த மருத்துவம் என அழைக்கப்படுகிறது. சித்தர்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள், அவர்கள் சித்தா எனப்படும் மருத்துவ முறையை நிறுவிய பெருமைக்குரியவர்கள்.

தமிழ்ச் சித்தர்களுள் அகத்தியர், ஒரு சிறந்த முனிவராகவும் சித்த மருத்துவத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். மேலும் தென்னிந்தியப் பாரம்பரியத்தில் தோன்றிய பதினெட்டு சித்தர்கள் சித்த மருத்துவத்தின் தூண்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். சித்தர்களின் கூற்றுப்படி, நோயை ஏற்படுத்தும் சில குறிப்பிட்ட காரணங்களால் செயழிழந்த உறுப்புகளைக் கூட்டி வைக்கவும் அதனை மீண்டும் செயல்பட வைக்கவும் சித்த மருத்துவத்தில் வழியுண்டு என அறியப்படுகிறது.

சித்த வைத்தியம் நோயின்றி மட்டுமல்லாமல் உடலை ஆரோக்கியத்துடன் பன்னெடுங்காலம் வாழ வைக்கவும் இம்முறையானது வகை செய்வதாகக் கூறப்படுகிறது. காயகல்பம் எனச் சித்த வைத்தியத்தில் ஒரு குறிப்பு உள்ளது. அதாவது உடலை அழியாமல் பாதுகாக்கும் முறையே காயகல்பம் எனப்படுகிறது. காயம் என்றால் உடல், கல்பம் என்றால் கோடி வருடம். மனித உடலை அழியாமல் தடுக்கும் உத்தி இம்மருத்துவத்தில் உள்ளது என்பது அறியப்படுகிறது.

சித்த வைத்தியம் என்பது மூலிகை மருத்துவம், வர்மம், வாசி யோகம் (பிராணாயாமம்), முப்பு (உலகளாவிய உப்பு) ஆகிய பல்வேறு மருத்துவ உத்திகளை உள்ளடக்கிய சிகிச்சை முறையாகும். இம்முறையானது தனிமனிதனின் உடல் அமைப்பு, உளவியல், ஆன்மீக நல்வாழ்வில் ஆகிய அனைத்தையும் சீர்தூக்கி மருத்துவம் செய்யக்கூடிய முறையாகும்.

பதினெட்டு சித்தர்களில் முதன்மையான சித்தர் அகஸ்தியர். அவரது வைத்தியம் சார்ந்த படைப்புகள் இன்னும் சித்த வைத்தியர்களிடையே மருத்துவம், அறுவை சிகிச்சை குறிப்புப் புத்தகங்களாகப் பயன்படுத்தப்படுகின்றது. சித்தர்கள் ஒருவரின் மனோவலிமையைப் பொறுத்துதான் அவர்களுடைய உடல் ஆரோக்கியமும் அமையும் என்பதனைத் திடமாக நம்புகின்றனர். சித்தர்கள், மனோவலிமைக்கும், உடல் ஆரோக்கியத்திற்கும் சித்த மருந்துகளையும் பல சிகிச்சை முறைகளையும் இவ்வுலகத்திற்கு விட்டுச் சென்றுள்ளனர். சித்தர்கள் பல ஆண்டுகளாக யோகவும் தியானமும் மூலம் மருத்துவக் குறிப்புகளுக்கான சித்திகளை அடைந்ததாக நம்பப்படுகிறது. இதன் மூலம் இவர்கள் மரணமில்லா பெருவாழ்வையும் ஞானத்தையும் கொண்ட சிறந்த படைப்பாகக் கருதப்படுகின்றனர்.

சித்த சிந்தனையின் முறையானது உடல்நலப் பிரச்சனைகளின் மூல காரணங்களையும், பல நோய்களுக்கான சிகிச்சை சூத்திரங்களையும் பதிவு செய்ய பங்களித்துள்ளது. 250க்கும் மேற்பட்ட சித்த மருத்துவ சூத்திரங்கள் பல்வேறு வகையான நோய்களுக்குக் சிகிச்சையளிப்பதில் பயனுள்ளதாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. அரை நூற்றாண்டுக்கு முன்பு, சித்த மருத்துவர்கள் பெரும்பாலோர் பாரம்பரிய சித்த மருத்துவர்களிடமிருந்து முறையான பயிற்சி பெற்றவர்கள் மேலும், பலர் பாரம்பரியமாக அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களிடம் இந்த வைத்திய முறையைக் கற்று வந்துள்ளனர். பாரம்பரியமாக வந்த வைத்தியர்கள் பலர் ஓலைச்சுவடிகளில் உள்ள வைத்திய முறையைத்

தங்களின் பாரம்பரிய இரகசியமாகவே வைத்தும் வந்துள்ளனர்.

சித்தர்கள் தங்கள் உடலும் மனமும் பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கியவர்கள் என்பதற்கு அவரது படைப்புகள் உறுதியான சான்றுகளை வழங்குகின்றன. திருமூலர் கருவறைக்குள் கரு வளர்ச்சியை விரிவாக விளக்குகிறார். தீ, காற்று, நீர், பூமி, விண்வெளி ஆகிய ஐந்து கூறுகள் பற்றிய தனது கோட்பாட்டில் மனித உடல் ஐந்து கூறுகளால் ஆனது என்றும் அவர் முன்வைத்தார். இது தவிர திருமூலர் அட்டாங்க யோகத்தை அறிமுகப்படுத்தினார். இவை எட்டு வித யோகப் படிநிலைகளைக் கொண்டது. சித்தர் திருமூலர் மட்டுமின்றி, தமிழ் இலக்கணத்திற்கு வழிகாட்டும் (கிமு 1400) பழமையான படைப்பான தொல்காப்பியமும், ஐந்து கூறுகளின் தத்துவார்த்த கருத்துடன் மனித வாழ்க்கையின் உறவையும் விவாதித்துள்ளது.

கிமு 600-ல், தமிழ் மருத்துவக் கோட்பாட்டின் அடித்தளங்களில் ஒன்றாக ஆசீவகம் எனப்படும் சமய தத்துவக் கோட்பாடும் அமைந்தது. ஆசீவகத்தின் தத்துவத்தின் கீழ் 'அங்கம்' என்ற படைப்பு மனித உடலின் வெளிப்புற உறுப்புகளும் உள்உறுப்புகளின் செயல்பாட்டையும் கூறுகிறது. இந்த நூற்றாண்டில் சித்த மருத்துவ முறை பற்றிய குறிப்புகளும் சமண இலக்கியத்தின் சில படைப்புகளான அச்சரங்கசூத்திரம், உத்தராத்யாயன சூத்திரம், சுக்த்ரகிதங்க சூத்திரம், கல்யாணகாரக சூத்திரம் போன்றவற்றிலும் காணப்படுகின்றன. இந்தப் படைப்புகள் சமண மதத்தைப் பின்பற்றுபவர்களிடையே ஆரோக்கிய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளன.

### சித்த மருத்துவத்தில் மருந்துகள்

சித்த மருத்துவத்தை மூன்று குழுக்களாகப் பிரிக்கலாம். அவை தாவரம் (தாவரங்கள்), தாது (கனிமப் பொருட்கள்), ஜங்கமம் (விலங்குகள்) (முருகன் செல்லையா, 2013). மேலும், உப்பு (தீயில் போடும் போது நீராவியை வெளியேற்றும் நீரில் கரையக்கூடிய கனிமப் பொருள்), பாஷாணம் (தண்ணீரில் கரையாத ஒரு பொருள், ஆனால் எரியும் போது நீராவியை வெளியிடும்), உபரசம் (பாஷாணத்தின் பண்புகள் கொண்டு சற்று வேறுபாடுகளைக் கொண்டது), உலோகம், ரசம் (ஒரு வகைத் திரவப் பொருள்), கந்தகம். (நீரில் கரையாத பொருள்) போன்றைவைகள் தாது குழுவின் மேலும் வகைப்பாடு பின்வருமாறு (Indian Journal of Traditional Knowledge, 2017)

### உடல் அமைப்பு மற்றும் செயல்பாடு பற்றிய சித்த மருத்துவம்

சித்த வைத்தியத்தின் கூற்றுப்படி, மனித உடல் 96 தத்துவங்களின் கலவையாகக் கருதப்படுகிறது. மேலும் இதில் மூன்று உயிர் தாதுக்கள் மற்றும் ஏழு உடல் தாதுக்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் உடல், உடலியல், உளவியல், அறிவுசார் அம்சங்களின் விவரங்கள் இதில் அடங்கும். இவை தவிர 72,000 இரத்த நாளங்கள், 13,000 நரம்புகள், பத்து பெரிய தமனிகளும் இதில் அடங்கும்.

### சித்த மருத்துவ வளர்ச்சி

சித்த மருத்துவம் தோன்றிய காலம் இன்னதென்று உரைத்தல் அரிதான செயல். தமிழர் வாழ்க்கை நாகரிகம் பெற்ற காலம் தொட்டே இம்மருத்துவ முறையும் வளர்ந்துள்ளது அறியப்படுகிறது. குறிப்பாகத் தொல்காப்பியத்தில் சித்தர்கள் அறிவர் என அழைக்கபடும் காலம் தொட்டே இம்மருத்துவம் மக்கள் வழக்கில் புழக்கத்தில் இருந்தது அறியப்படுகிறது.

ஆய்வின் அடிப்படையில் பார்க்கும் போது ஆயுர்வேத மருத்துவமானது வட இந்தியாவிலும், சித்த மருத்துவமானது தென் தமிழகத்திலும் வேத காலம் தொட்டே இருந்துள்ளது. ஆயினும் இம்மருத்துவர் தனித்த ஓர் இயக்கமாக அல்லது அறிவாக்கமாக உருவாகாமல் பல்வேறு சித்தர்களின் கண்டுபிடிப்புகளின் மூலமாக விளைந்ததாகவே அறியப்படுகிறது. இதில் முதன்மைப் பங்காற்றியவர்கள் அகத்தியர் ஈறாக பாம்பாட்டிச் சித்தர் வரையில் இருந்த பதினெண் சித்தர்களாவர்.

இவர்களும் அகத்தியர் சித்த வைத்தியத்தின் தந்தையாகப் போற்றப்படுகின்றார். மேலும் போகர் தலைமையில் புலிப்பாணி சித்தர் முதலானவர்களின் கூட்டு முயற்சியில் உருவான பழனி மலை பாலதண்டாயுதபாணி சிற்பம் சித்த

மருத்து வளர்ச்சியின் உச்சம் எனலாம். எளிதில் கட்ட இயலாத ஒன்பது வகையான பாசான (நச்சுத் தன்மை உடையது) இரசத்தைக் கட்டி உருவாக்கப்பட்டது. இந்த விகிரகத்தின் மீது பட்டுக் கிடைக்கப்படும் பஞ்சாமிரதம் சகல நோய்களையும் தீர்க்கும் அருமருந்தாக இன்றும் விளங்குகிறது.

தொடக்கக்காலத்தில் இம்மருத்துவ முறையானது குருகுல வாசத்தின் வழி கற்பிக்கப்பட்டது. இதில் தேர்ந்த மாணவர்கள் உருவாக்கப்பட்டு இம்மருத்துவப் பாரம்பரியம் சங்கிலித் தொடர்போல எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் மன்னர்களின் ஆதரவில் இம்மருத்துவம் செழித்தது. மன்னரால் கட்டுவிக்கப்பட்ட ஆலயங்கள் சித்த மருத்துவ ஆராய்ச்சிக் கூடங்களாக விளங்கின. மேலும் காட்டு வளங்களில் இருந்து பெறப்பட்ட பலதரப்பட்ட மூலிகைகள் ஆய்வு செய்யப்பட்டு மருத்துகளாக உருவாக்கப்பட்டன.

மருத்துவம் சார்ந்த குறிப்புகள்யாவும் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. இவை அடுத்த அடுத்த தலைமுறைவரை பாதுகாக்கப்பட்டன. சித்த மருத்துவர்களின் நேரடிப் பயிற்சியிலும், சித்த மருத்துவ ஓலைச் சுவடியியல் ஆராய்ச்சியின் மூலமாகவும் இம்மருத்துவம் தனித்துவத்துவத்துடன் வளர்ந்தது. இவ்வளர்ச்சியானது பாரத தேசமெங்கும் பரவியது.

### பிரிட்டீசாரின் காலனித்துவம்

பிரிட்டீசார் இந்திய நாட்டை வசப்படுத்தி ஆண்டு வந்த காலத்தில் நவீன மருத்துவம் இந்திய நாட்டில் வளர்ச்சி அடையத் துவங்கியது. நவீன மருத்துவத்தின் சிகிச்சை முறை, உடனுக்குடன் வலி நிவாரணியை அளிப்பது, கடுமையான நோய்களுக்கும் மருத்துவம் பார்ப்பது, அம்மருத்துவம் சார்ந்த நிர்வாகம் போன்றவை தமிழ் நாட்டில் சித்த மருத்துவம் பின்னடைவை அடையச் செய்ததை மறுக்க இயலாது.

ஆயினும் நவீன மருத்துவமானது ஒட்டு மொத்த பாரத தேசத்தையும் தன் வசத்தில் கொண்டு செல்லவில்லை. காலணித்துவ ஆட்சி காலத்தில் கிராமப்புரங்களில் சித்த மருத்துவமே பிரதான மருத்துவமாக விளங்கியது என்பதனை மறுக்க இயலாது. இவ்விடத்தே நவீன மருத்துவம்ராடையப்பெறாமல் இருந்தது. சில இடங்களில் நவீன மருத்துவச் சேவைகள் சென்றடைந்த போதிலும், ஆன்மிக்க மற்றும் சமய நம்பிக்கைகள், அதோடு பழைமைவாதக் கொள்கைகளில் ஆழ்ந்திருந்த கிராமத்துத் தமிழ் மக்களிடையே சித்த மருத்துவமே கோளோச்சி நின்றது. அதே வேளையில் நவீன மருத்துவமே பாரத தேசத்தில் ஆளுமை மிக்க மருத்துவமாக உருவெடுக்கத் துவங்கியது.

### சுதந்திரத்திற்குப் பிறகு

பாரத தேசம் சுதந்திரம் பெற்ற பின்னர் நவீன மருத்துவத்தைப் போலவே சித்த மருத்துவம், ஆயுர்வேதம் போன்ற இதர பாரம்பரிய மருத்துவங்களும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சி அடையத் துவங்கின. சித்த மருத்துவம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளைக் கற்பிக்க உயர்கல்வி நிறுவனங்களைத் திறந்து இந்திய அரசு பாரம்பரிய மருத்துவ முறைகளை மேம்படுத்தியது. தற்போது சித்த மருத்துவம் அரசு உயர்கல்வி நிறுவனங்களிலும், தமிழ்நாடு, கேரளாவில் உள்ள தனியார் சித்த மருத்துவக் கல்லூரிகளிலும் கற்பிக்கப்படுகிறது. இலங்கையில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களும் இந்த முறையை கற்பிப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

பிறகு, இந்திய அரசு சித்த மருத்துவம் உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகளைக் கற்பிக்க உயர்கல்வி நிறுவனங்களைத் திறந்து பாரம்பரிய மருத்துவ முறைகளை மேம்படுத்தியது. தற்போது, தமிழ்நாடு மற்றும் கேரளாவில் உள்ள அரசு உயர்கல்வி நிறுவனங்களிலும், தனியார் சித்த மருத்துவக் கல்லூரிகளிலும் சித்த மருத்துவம் கற்பிக்கப்படுகிறது. இந்தியாவைத் தவிர, இலங்கையில் உள்ள இரண்டு பல்கலைக்கழகங்களிலும் சித்த மருத்துவம் கற்பிக்கப்படுகிறது.

## இந்தியாவில் சித்த மருத்துவ முறையின் வளர்ச்சியின் வரலாறு

சித்த மருத்துவம் இந்தியாவின் பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஒன்று. ஆயுர்வேதம், யுனானி மற்றும் ஹோமியோபதியுடன் ஒப்பிடும்போது பழமையான மருத்துவ முறை சித்த மருத்துவம் ஆகும். தமிழ் மருத்துவம் என்று அழைக்கப்படும் சித்த மருத்துவம் இந்தியாவில் கிமு 4000 முதல் வளர்ந்துள்ளது.

சித்த மருத்துவத்தின் வளர்ச்சி முறையான ஆவணங்களால் உருவாக்கப்பட்டது. சித்த மருத்துவம் தொடர்பான அனைத்து ஆவணங்களும் விரிவான ஆய்வின் அடிப்படையில் தற்காலத்தில் செயல்படுத்தப்படுகின்றன. மேலும் பண்டையத் தமிழ் சமூகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட சித்த மருத்துவ நடைமுறைகள் யாவும் கூர்ந்த நோக்கி ஆராய்ச்சி செய்யப்பட்டு தற்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

சித்த மருத்துவம் தமிழ் மக்களிடையே சக்திவாய்ந்ததாகவும் மரியாதைக்குரிய மருத்துவமாக மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள தமிழர்களின் கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றைப் பிரதிபலிப்பதாகவும் விளங்கியது.

சித்த மருத்துவம் என்பது தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் வாழும் தமிழர்களின் நடைமுறையில் உள்ள ஒரு மருத்துவமாகும். எனவே இந்த மருந்து வெளிநாடுகளில் குறிப்பாகத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் நாடுகளில் வளர்ந்துள்ளது. சிங்கப்பூர், மலேசியா, மொரிஷியஸ் மற்றும் தென்கிழக்கு ஆசியாவின் பெரும்பகுதி நாடுகளில் சித்த மருத்துவ பயன்பாடு அறியப்படுகிறது.

## இந்தியாவில் சித்த மருத்துவத்தின் வரலாற்று வளர்ச்சியின் காலவரிசை

1) கிமு.3000 - திருமூலர் தனது திருமந்திரம் என்ற நூலில் மனதிற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும், பஞ்சபூத தத்துவம், அஷ்டாங்க யோகம், அணு கோட்பாடு பற்றியும் தெளிவான, விரிவான விளக்கத்தை அளித்துள்ளார்.

2) கிமு 1400- தமிழ் இலக்கணத்திற்கு வழிகாட்டும் மிகப் பழமையான படைப்பான தொல்காப்பியம் ஐந்து கூறுகளின் (ஐம்புதம்) கோட்பாடு பற்றிய கருத்தையும் விவாதித்துள்ளது.

3) கிமு 600 -ஆசிவகம்- தமிழ் மருத்துவத்தின் தத்துவமும் அடிப்படையும் குறித்துப் பல் சிந்தனைகளை முன்வைத்துள்ளது.

4) கிமு 600 - ஜெயின் இலக்கியம் – சித்த (தமிழ்) மருத்துவத் தத்துவம் குறித்து விரிவாகப் பேசுகிறது.

5) கிமு 200 - திருக்குறள் - மருந்து அதிகாரம் மருத்துவம் தொடர்பான சிந்தனைகலை முன்வைத்துள்ளது.

6) கி.பி 200 மணிமேகலை – தர்க்கக் கோட்பாடு (அளவையியல்) குறித்த குறிப்புகளை முன்வைக்கிறது.

7) ஏலதி (100-500), திரிகடுகம் ஆகியவை சித்த மருந்துகளின் பெயரால் அழைக்கப்பட்டுள்ளன. இவை நீதி இலக்கியங்களாயினும் சித்த மருத்துவக் குறிப்புகளை நிறைவாகக் முன்விக்கின்றன.

8) கி.பி. 700-திருவாசகம், பண்டைய தமிழ் இலக்கியங்களில் 'சைவ சித்தாந்த' தத்துவம் பற்றிய தகவல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது, இந்தத் தகவல் சித்தத்தின் கருத்தாக்கத்தின் ஒரு பகுதியாக அமைகிறது.

9) கிபி 1121 - சோழ நாட்டு இளவரசி குந்தவை நாச்சியார் தனது தந்தை ராஜா சுந்தராஜ சோழனின் பெயரில் சித்த மருந்துகளின் மருந்தகத்தை நிருவியுள்ளார்.

10) கிபி 1200-பக்தி இலக்கியங்களில் ஒன்றான பெரியபுராணம் பல வகையான நோய்களைப் பற்றியும் அதற்கான மருத்துவக் குறிப்புகள், மருந்துகள் பற்றியும் கூறுகிறது. இதில் இடம் பெறும் பல அடியார்கள் சித்தர்களாக மிளிர்ந்துள்ளனர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருமூலர்.

11) 1700 கி.பி., தஞ்சாவூர் மாவட்டத்தை

ஆண்ட தமிழ்நாட்டின் மன்னார் சரபோஜி, பாரம்பரிய இந்திய மருத்துவ செல்வத்தை பாதுகாத்தார். (சித்தா, ஆயுர்வேதம் மற்றும் யுனானி) அவர் எல்லா பொக்கிஷங்களையும் சேகரித்தார். ‘சரபோஜபேந்திர வைத்திய முறைகள்’ என்ற தலைப்பில் இந்திய பாரம்பரிய மருத்துவத்தின் அனைத்து தகவல்களையும் சேகரித்தார். மேலும், ஆயுர்வேதம், சித்த மருத்துவம் மற்றும் யுனானி மருந்துகளுக்கு உரிய அங்கீகாரம் அளித்து, ஆய்வுகளும் நடத்தினார்.

12) 1925 ஆம் ஆண்டு அரசு பாரம்பரிய இந்திய மருத்துவப் பள்ளியானது சித்த மருத்துவத்துடன் ஆயுர்வேதம் மற்றும் யுனானி மருத்துவத்தையும் கற்பிக்கத் தொடங்கப்பட்டது. (சித்த மருத்துவம் நிறுவுதல்)

13) 1926 பாரம்பரிய இந்திய மருத்துவத்தின் அரசு மருத்துவமனை இந்தியப் பாரம்பரிய மருத்துவப் பள்ளிக்கு அடுத்ததாக நிறுவப்பட்டது.

14) 1940 முகமது உஸ்மான் குழு தமிழ்நாட்டில் இந்திய மருத்துவ முறையை மேம்படுத்தவும் வலுப்படுத்தவும் அமைக்கப்பட்டது.

15) 1944 மருந்தகம் மற்றும் இந்திய மருத்துவ பயிற்சியாளர்கள் கூட்டுறவு கடைகள் (IMPCOPS) சித்த மருந்துகளைத் தயாரிக்க நிறுவப்பட்டது.

16) 1947 பாரம்பரிய மருத்துவப் பள்ளி, பாரம்பரிய இந்திய மருத்துவத்தில் பட்டம் வழங்குவதற்குப் பாரம்பரிய இந்திய மருத்துவக் கல்லூரி என்று பெயரிடப்பட்டது.

17) 1955 இந்திய பாரம்பரிய மருத்துவக் கல்லூரி ஒருங்கிணைந்த மருத்துவக் கல்லூரி என்று பெயர் மாற்றப்பட்டது. மாணவர்கள் நவீன மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைகளைப் படிக்க ஊக்குவிக்கப்பட்டது.

18) 1960 வட இந்தியாவின் ஜாம் நகரில் உள்ள குஜராத் ஆயுர்வேத பல்கலைக்கழகத்தில் சித்த ஆய்வு மையம் நிறுவப்பட்டது.

19) 1964 & 1966 ஆம் ஆண்டுகளில், சித்த மருத்துவத்தில் பட்டப்படிப்பு, இந்தியாவின் தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டையில் உள்ள இந்திய பாரம்பரிய மருத்துவ முறைக் கல்லூரியில் தொடங்கப்பட்டது.

20) 1969 இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம் மற்றும் ஹோமியோபதியின் ஆலோசனை மன்றங்கள் அமைக்கப்பட்டன (CCRIM & H).

## முடிவுரை

பொதுவாக, தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஆன்மீகம், மருத்துவம், இலக்கியம், பொருளாதாரம் போன்ற துறைகளில் பெரும் பங்காற்றியவர்கள் என்று சித்தர்களை குறிப்பிடலாம். சித்தர்கள் விட்டுச் சென்ற பல பாரம்பரிய நடைமுறைகளை இன்றும் தமிழர்கள் மத்தியில் காணலாம். சித்தர்கள் விட்டுச் சென்ற துறைகளில் சித்த மருத்துவம் ஒரு முக்கிய துறை ஆகும். இது உலகெங்கிலும் உள்ள அனைத்து தமிழ் சமூகங்கள் மத்தியில் பிரபலமான மருத்துவங்களில் ஒன்றாக விளங்குகிறது. இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை மற்றும் பல நாடுகளில் சித்த மருத்துவம் பரவலாக நடைமுறையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. மனிதகுலத்தின் ஆரோக்கியத்தைப் பராமரிப்பதில் இந்தச் சித்த மருத்துவம் பயனுள்ளதாக இருப்பதை நிரூபிக்கிறது. இந்தியப் பாரம்பரிய மருத்துவத்தில் சித்த மருத்துவ முறையானது நவீன மருத்துவத்திற்கு இணையாக நிபுணத்துவம் உடையதாக உள்ளது. இன்று இந்திய நாட்டின் மத்திய அரசு முன்னெடுத்துள்ள பல்வேறு திட்டங்களால் ஆயுர்வேதம் சித்த மருத்துவத் துறையோடு மற்ற பாரம்பரிய மருந்துகளும் மிகப் பெரிய வளர்சியை நோக்கிச் செல்கின்றன. அதே வேளையில் நவீனத்துவத்தின் தாக்கம் இதன் மீது இல்லாமல் இல்லை. சித்த மருத்துவம் அதனையும் உள்வாக்கிக் கொண்டு காலத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று வளர்ந்து வருகிறது.

**References**

Amritjude, D. D. (2017, September 25). *Archeological Findings in Sirkazhi & Siddha Medicine. Siddha Medicine & Natural Treatment*. Retrieved Feb 10, 2024, from https://siddham.in/archeological-findings-sirkazhi-siddha-medicine

Chidambarathanu Pillai. (2000). *Thamizhar Thaai Marutthuvam*. Siddha Medical Literature Research Centre.

Chillayah, M. (2013). *Silambam.Asia*. Retrieved Jan 09, 2024, from https://silambam.asia/siddhar.html

Ganapathy, T. N. (1993). *The Philosophy of the Tamil Siddhas*. Ravi Publications.

Ganapathy, T. N. (2004). *The Yoga of The Eighteen Siddhas: An Anthology*. Babaji's Kriya YogaandPublications.

Garg, K C, and Rahul Kumar Singh. "Indian Journal of Traditional Knowledge: A Bibliometric Study." *Library Herald*, vol. 55, no. 4, 2017, p. 488, https://doi.org/10.5958/0976- 2469.2017.00038.0. Accessed 25 Aug. 2020.

Kandasamy, S.N. (2003). *Inthiya Thathuva Kalanjiam*, Thokuthi 3. Meyyappan Pathippagam.

Sambath, U. (2006). *Siththamellam Sivamayam*. Varam Pathippagam

Samy Sitambaranaar. (2001). *Siddhar kanda Vinnyaanam Thatthuvam*. Manivaasagar Pathippagam.

Vasudevan, R. *Thirumanthiram*. Kizhakku Pathippagam, 7 Mar. 2007.